## வெகுமதி கொடுத்த வெண்பன்றி !

## 10.02.2014

பசுமை விகடன் வாங்கியதும், முதலில் 'தண்டோரா' பகுதியைத்தான் பார்ப்பேன். அதில், கால்நடை வளர்ப்புப் பயிற்சி சம்பந்தமாக அறிவிப்பு வந்திருந்தால்... உடனே அந்தப் பயிற்சிக்கு ஆஜராகிவிடுவேன். அப்படிக் கற்றுக் கொண்டதுதான், இப்போது பன்றி வளர்ப்பில் இறங்கியிருக்கிறேன் என்றார், சென்னை, பெருங்குடியைச் சேர்ந்த கோட்டைமுத்து.

காஞ்சிபுரம் மாவட்டம், மேல்மருவத்தூர் அருகே உள்ள ஓரத்தி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது சிறுதாமூர், அங்குதான், கோட்டைமுத்துவின் வெண்பன்றிப் பண்ணை இருக்கிறது. பசுமைப் போர்த்திய நெல் வயல்களுக்கு மத்தியில் அமைந்துள்ள பண்ணையில் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கோட்டைமுத்துவைச் சந்தித்தோம்.

எலெக்ட்ரிக் பொருள்கள் தயாரிக்கும் கம்பெனியில் வேலை செய்துட்டிருந்தேன். அங்கு செக்யூரிட்டியாக வேலை செய்த பொன்னுரங்கம் மூலமாக, 2009-ம் வருடத்தில் 'பசுமை விகடன்' அறிமுகமானது. முதன் முதலில் அதை படித்தப்போது... எனக்குள்ள இவ்வளவு மாற்றத்தை அது ஏற்படுத்தும் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. விவசாயம், கால்நடை என்று நிறைய விஷயங்கள் இருந்ததால் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். அதுதான் எனக்கு விவசாயம் மேல் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியது. நிறைய கால்நடை வளர்ப்பு பயிற்சிகளில் கலந்துக் கொண்டேன். அதன் பிறகுதான் தம்பியுடன் சேர்ந்து விழுப்புரம் பக்கத்தில் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கினேன். அது எனக்கு தூரமாக இருந்ததால், இங்கு 2 ஏக்கர் நிலம் வாங்கிவிட்டேன். முதல் போகமாக 40 சென்ட்டில் சிகப்புகார் நெல்லும், 40 சென்டில் மக்காச்சோளமும் போட்டேன். யூரியா போடாமல் பயிர் விளையாது என்று சுத்தியிருப்பவர்கள் சொன்னார்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல், இயற்கை விவசாயத்தில்தான் செய்தேன். நல்ல மகசூல் கிடைத்தது. அதில் கிடைத்த நெல்லை அரிசியாக்கி, பசுமை விகடன் மூலமாக தொடர்பு கிடைத்த சிலருக்கு விற்பனை செய்தேன். அதன்பிறகு பக்கத்திலேயே இரண்டு ஏக்கர் சவுக்குத் தோட்டத்தையும் வாங்கிப் போட்டுவிட்டேன் என்றார்.

**கவலைப்பட்டால் காசு கிடைக்காது !**

விவசாயம் செய்யும் போது வயல் பக்கத்தில் இருந்து பார்த்துக்க வேண்டியிருந்தது. ஆனால், உடனடியாக குடும்பத்தை கிராமத்திற்கு அழைத்து வரமுடியலை. அதனால், ஆடு, மாடு வளர்க்கலாம் என்று யோசித்தப்போதுதான் வெண்பன்றி வளர்க்கும் யோசனை வந்தது. உடனே, அரியலூரில் ஒருத்தரிடம் பன்றிக் குட்டிகளை வாங்கிகொண்டு வந்துவிட்டேன். இவரும், பயிற்சி மூலமாக எனக்கு அறிமுகமானவர்தான்.

ஆரம்பத்தில் 460 சதுரடியில் தடுப்புகள் வைத்து ஐந்து தாய் பன்றிகள், ஐந்து குட்டிகளை வாங்கி கொண்டு வந்தேன். எங்க குடும்பத்தில் இதுவரைக்கும் யாரும் இந்தத் தொழில் செய்ததில்லை. அதை விரும்பவும் இல்லை. என் மனைவிகூட 'உங்களுக்கு எதுக்கு இந்த வேலை? வேற தொழில்கூட செய்யலாமே என்று சொன்னார்கள். இதற்காக அவங்க ஒரு வாரம் என்னிடம் பேசாமல்கூட இருந்தாங்க. ஆனால், நான் கவலைப்படவேயில்லை. ஆரம்பத்தில் பசுந்தீவனம், அடர்தீவனம் கொடுத்து வளர்த்தேன். அதில் சரியான வளர்ச்சியில்லை. அதன்பிறகு, பெருங்குடி பக்கம் காலேஜ் ஹாஸ்டல்களில் கிடைக்கும் வீணான, மீதமாகும் உணவுப் பொருள்களை எடுத்து கொண்டு வந்து கொடுக்க ஆரம்பித்தேன். ஓரளவுக்கு வளர ஆரம்பித்தது. ஒரு வருடத்தில் குட்டிகளுடைய எண்ணிக்கை அதிகமாயிடுச்சு. அதனால், முறையாக கொட்டகை போட்டு வேலைக்கு ஒருத்தரை சேர்த்துக்கிட்டேன். இதற்காக வங்கியில் கடன் உதவியையும் வாங்கினேன் என்றார் கோட்டைமுத்து.

**3 மாதத்தில் விற்பனை !**

"பன்றிகளுக்கு என்று சில குணங்கள் உண்டு. குறிப்பிட்ட இடத்தில்தான் சாணமும், மூத்திரமும் போகும். ஒன்று மேல் ஒன்று பட்டுத்துக் கொண்டுதான் தூங்கும். தீவனத்தை வைக்கும் போது கூட்டமாகத்தான் சாப்பிடும். பசிக்க ஆரம்பித்தால், எல்லாம் சேர்ந்து அலற ஆரம்பித்துவிடும். இதையெல்லாம் சமாளிக்க வேண்டும். பன்றிப் பண்ணையில் தீவனம்தான் மிகவும் முக்கியம். அதனால் அதற்கு சரியான எற்பாட்டைப் செய்திடனும். பிறந்த 50 நாளில் தாயிடிமிருந்து குட்டிகளைப் பிரித்துவிட வேண்டும். ஒரே வயதுள்ள இருப்பதைந்து குட்டிகளை ஒரு கொட்டகைக்குள் ஒன்றாக விடலாம். வளர வளர இட நெருக்கடி அதிகமாகும். அதற்கேற்ற மாதிரி பிரித்து விடவேண்டும். 3 மாத வயதில் குட்டிகளை விற்கலாம். அந்த சமயத்தில் ஒரு குட்டி 2 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து, 3 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலை போகும்.

**தனித்தனியாக வளர்ப்பு!**

6 மாத வயது வந்த உடனே, கறிக்கு வளர்க்கும் குட்டிகளையும், தாய்ப்பன்றிகளாக மாற்ற விரும்பும் குட்டிகளையும் தனித்தனியாக பிரித்துவிட வேண்டும். சினைக்கு வளர்க்கும் பன்றிகளோடு ஒரு கிடா பன்றியையும் விட்டுவிடவேண்டும். 11 மாதத்திற்க்கு மேல் பன்றிகள் சினைக்கு வரும். சினை பிடித்த பன்றியை தனி ஷெட்டில் அடைத்துவிட வேண்டும். பன்றியோட சினைக்காலம் 3 மாதம் 3 வாரம் 3 நாள். ஒரு பன்றி சராசரியாக 7 குட்டியிலிருந்து 12 குட்டி வரை போடும். வருடத்திற்கு ஒரு முறை பன்றிகள் சினைக்கு வரும். குட்டிகைளைப் பிரித்த பிறகு, அடுத்து வரும் சினைப்பருவத்தில் கிடாவோட சோக்கக் கூடாது. அடுத்தப் பருவத்திற்க்கு வரும்போதுதான் கிடாவோட சேர்க்கணும்.

அப்போதுதான், பன்றியோட உடல் நிலை சீராக இருக்கும். 2 வருடத்திற்கு ஒரு முறை கிடாவை மாற்றிவிட வேண்டும்.

பிறந்த 50 நாள் வரை தாய்ப்பாலே போதுமானதாக இருக்கும். அதன்பிறகு உணவு கொடுக்கலாம். தாய்ப்பன்றிகளாக மாற்ற வளர்க்கும் பன்றிகளுக்கு உணவுக் கழிவுகளுடன் பசுந்தீவனம், அடர்தீவனம் எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும். 2 சினைப் பன்றிகளுக்கு ஒருவேளைக்கு மூன்று கிலோ அடர்தீவனம், 7 கிலோ பசுந்தீவனம், ஒரு அன்னக்குடை உணவுக்கழிவு என்று கொடுக்கிறோம். கறிக்காக வளர்க்கும் பன்றிகளுக்கு கழிவுகளை மட்டும் கொடுத்தால் போதுமானது. இந்தப் பன்றிகளுக்கு காலையில் ஒரு குடம் கழிவு, சாயங்காலம் ஒரு குடம் கழிவு என்று கொடுக்கிறோம். பசிக்கேற்ற மாதிரி சாப்பாட்டோட அளவைக் கூட்டி குறைத்துக்கொள்ளும். கறிக்கு வளாக்கும் பன்றிகள் ஒரு வருடத்திற்குள் 90 கிலோ வரைக்கும் எடை வந்துவிடும்.

தினமும் காலையில் ஏழு மணிக்கு ஷெட் முழுக்க கழுவிவிட்டு, ஒவ்வொரு பன்றியையும் குளிப்பாட்டி விடுவோம். கழுவி முடிக்க, 11 மணி ஆகிவிடும். அதன்பிறகுதான் தீனி வைப்போம். சாயங்காலம் 5 மணிக்கு தீனி வைப்போம். எப்பவும் ஷெட்டுக்குள் தண்ணீர் இருக்கும் மாதிரி பார்த்துக்குவோம். வாரம் ஒரு முறை பசுந்தீவனத்தோடு வேப்பிலையைக் கலந்து கொடுக்கிறோம். அதனால் வயிற்றில் புழுக்கள் இருக்காது என்றார் கோட்டைமுத்து.

வருடமெல்லாம் வருமானம் !

முதல் ஈத்து மூலமாக 65 குட்டிகள் கிடைத்தது. அதில் கொஞ்சத்தை விற்றுவிட்டு, மீதியை வளர்க்க ஆரம்பித்தேன். இப்போது கையில் 20 தாய் பன்றிகள், 89 குட்டிகள் (3 மாதம் முதல் 6 மாத வயது வரை), 21 பால் குட்டிகள், 5 கிடாக்கள் என்று மொத்தம் 135 பன்றிகள் இருக்கு. கொட்டகைக்கு 5 லட்ச ரூபாய் செலவானது. தீவனம், போக்குவரத்து, மின்சாரம், சம்பளம் என்று வருடத்திற்கு சராசரியாக ஆறரை லட்ச ரூபாய் வரை செலவாகிறது. இந்த ஒரு வருடத்தில் மொத்தம் 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவாகிவிட்டது. இதுவரை 4 லட்ச ரூபாய்க்கு பன்றிகளை விற்பனை செய்திருக்கிறேன். பண்ணையில் 5 லட்ச ரூபாய் மதிப்புக்கு பன்றிகள் இருக்கு. அடுத்தடுத்த வருடத்தில் இன்னமும் விற்பனை கூடும். அப்போது லாபமும் அதிகரிக்கும் என்றார்.

| **அடர்தீவனம் தயாரிப்பு !<br>(100 கிலோ அளவுக்கு)** | |
|---|---|
| | **கிலோ** |
| மக்காச்சோளம் | 40 |

| | |
|---|---|
| கோதுமை | 20 |
| தவிடு | 15 |
| கம்பு | 15 |
| கருவாடு | 6 |
| தாதுஉப்புகள் | 3 |
| உப்பு | 1 |
| இவற்றை மெஷினில் கொடுத்து அரைத்து, தீவனமாகக் கொடுக்க வேண்டும். | |

**தொடர்புக்கு**

கோட்டைமுத்து, செல்போன் : 91505 89396

**குறைந்த விலையில் குட்டிகள் !**

பன்றி வளர்ப்பு பற்றிப் பேசிய காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் குமாரவேல், “கறி, இனவிருத்தி என்று பன்றி வளாப்பில் இரண்டு வகைகள் உண்டு. இனவிருத்திக்காக வளர்க்கும் பன்றிகளுக்கு பசுந்தீவனமும், அடர்தீவனமும் மட்டும்தான் கொடுக்க வேண்டும். அப்போதுதான், புரதச்சத்து, மாவுச்சத்து, வைட்டமின்கள், தாதுஉப்புகள் என்று எல்லா சத்துகளும் கிடைக்கும்.

கறிக்காக வளாக்கும் போது, உணவுக் கழிவுகளை மட்டுமே கொடுத்தால் போதும். ஆனால், சூடுபடுத்திக் கொடுக்க வேண்டும். எங்கள் வேளாண் அறிவியல் நிலையத்தில் உயிர் எடைக்கு ஒரு கிலோ 200 ரூபாய் என்று வளர்ப்புக்கான குட்டிகள் விற்பனைக்கு இருக்கு. ஒரு குட்டி 7 கிலோவிலிருந்து. 10 கிலோ எடை வரை இருக்கும் என்றார். வசம்பை இடித்து தண்ணீரில் கலந்து பன்றிகள் மேல் தெளித்துவிட்டால்… ஈமொய்க்காது என்றார்.

**தொடர்புக்கு**

கோட்டைமுத்து, செல்போன் : 91505 89396

**ஆதாரம் : பசுமைவிகடன் வெளியீடு 10.02.2014 www.vikatan.com**